بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

**இடம் : பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசல் – இலண்டன்.**

August 16 2013

**தமிழாக்கம் : மவ்லவி M. ரஃபீக் அஹ்மது சாஹிப்**

# அஹ்மதிய்யத்தின் அடிப்படைத் தத்துவம்

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

சில நாட்களுக்கு முன் தற்செயலாக நான் ஒரு பொறுப்பாளருடன் பேசிக் கொண்டிருக்கும் போது, மார்க்கம் மற்றும் தர்பிய்யத் தொடர்பான ஓர் ஆய்வு நடந்த போது, சில விசயங்கள் எனக்கு தெரிய வந்தன. பிறகு அவரிடமிருந்து எழுத்துப்பூர்வமான அறிக்கையையும் நான் கேட்டுப் பெற்றேன். இதை பார்த்து விட்டு சில விசயங்களைப் பற்றி நான் கூற வேண்டும் என்று எனக்கு தோன்றியது. ஜமாஅத்தில் ஒரு பிரிவினர்க்கு இதன் தேவை இருக்கின்றது. அவ்வாறே சில விசயங்கள் பொறுப்பாளர்களிடமும் கூற வேண்டியதுள்ளது.

இந்த விசயங்கள் இங்குள்ள ஜமாஅத்துகளுக்கு முக்கியமானதாக இருப்பது போன்றே இவை உலகிலுள்ள மற்ற ஜமாஅத்துகளுக்கும் முக்கியமானதாகும். அல்லது ஆக்டிவ் ஆக இல்லாத புதிய தலைமுறைக்கும் ஜமாஅத்திலுள்ள சகோதரர்களுக்கும் இதுபற்றி தெரிந்திருப்பது அவசியமானதாகும். இவர்கள் அதிகமாக ஜமாஅத் பணிகளில் ஈடுபடாமல் இருக்கின்றார்கள்.

பொதுவாக இந்த கருத்துக்கள் வெளிப்படையாக தெளிவாகக் கூறப்படுவதில்லை. அல்லது முரப்பிகள் அல்லது பொறுப்பாளர்கள் ஜமாஅத் சகோதரர்களுக்கு முன்னால் இந்த கருத்துக்களை எந்த அளவு சிறந்த முறையில் எடுத்துக் கூற வேண்டுமோ, அந்த அளவு சிறந்த முறையில் எடுத்துக் கூறுவதில்லை. இதன் காரணமாக சிலரது மனதில் குறிப்பாக இளைஞர்களிடம் இத்தகைய கேள்விகள் எழுகின்றன. ஆனால் அவர்கள் கேள்விகளைக் கேட்பதில்லை. ஜமாஅத்தின் சுற்றுச்சூழலில் இருப்பவர்கள் அல்லது அவர்களுக்கு நெருக்கமான உறவினர்கள், பெற்றோர்கள் இவற்றை தீயதாகக் கருதுவர் என்பதால் இவற்றை அவர்கள் கேட்காமல் இருக்கின்றார்கள். அல்லது அவர்கள் ஏதாவது துன்பத்தில் சிக்கிக் கொள்வர் என்பதால் கேட்காமல் இருக்கின்றார்கள். ஆனால், முரப்பிகள், முபல்லிக்குகள் அல்லது பொறுப்பாளர்கள் அல்லது இதைப் பற்றிய அறிவு உள்ளவர்கள் ஆகியோரிடம் இதுபற்றி கேட்டு அல்லது தமது கிளை அமைப்புகளின் பொறுப்பாளர்களிடமும் கேட்டு, குத்தாமுல் அஹ்மதிய்யா மற்றும் லஜ்னாவுடன் தொடர்புடைய ஆண்கள், பெண்கள் ஆகியோரிடம் கேட்டு இதுபற்றி தெரிந்திருக்க வேண்டும். இவர்கள் தத்தமது கிளை அமைப்புகளுடன் எந்த அளவு தொடர்புள்ளவர்களாக இருக்க வேண்டும் என்றால், எளிதாக அவர்களிடம் இதுபற்றி அவர்கள் கேள்வி கேட்க முடிந்திருக்க வேண்டும். அதன் மூலம் இவர்கள் தங்களுடைய அறிவையும் வளர்த்துக் கொள்ள முடியும். மேலும் தங்களுக்குள்ள சந்தேகங்களையும் அவர்கள் போக்கிக் கொள்ள முடியும். அல்லது எனக்கும் இதுபற்றி அவர்கள் எழுதலாம். சிலர் எனக்கு எழுதவும் செய்கின்றனர். மற்ற நாடுகளிலிருந்தும் சில சமயங்களில் இங்கிருந்தும் சிலர் எனக்கு எழுதுகின்றனர். மிகவும் அதிகமாக மரியாதையின் வட்டத்திற்குள் நின்றவாறு கண்ணியத்துடன் இவற்றை எழுதுகின்றார்கள். பிறகு அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதிலும் தரப்படுகின்றது.

எவ்வாறிருப்பினும், இந்த விசயங்களும் என் முன்னால் வந்துள்ளன. அதாவது சில பொறுப்பாளர்களுக்கு கூட அவர்களது கடமைகள், அவர்களுக்குரிய அதிகார வரம்பு ஆகியவற்றைப் பற்றி விளக்கமாக தெரியவில்லை. மேலும் அவர்கள் தங்கள் பொறுப்புகளை அதற்குரிய உரிமைக்கேற்ப முழுமையாக நிறைவேற்றுவதில்லை. நான் கூறவுள்ள விசயங்களில் ஓர் அம்சம் நமது கொள்கைகள் மற்றும் அது தொடர்பான அறிவுடன் தொடர்புடையதாகும். நாம் ஏன் இந்தக் கொள்கையில் நிலைத்து நிற்கின்றோம்? என்பதைப் பற்றி நமக்கு தெரிந்திருக்க வேண்டும். இவ்வாறே நாம் செய்ய வேண்டும் என்று கூறப்படும் சில விசயங்கள் தொடர்பாகவும் கவனமூட்டப்படுகின்றது. அவற்றை செய்ய வேண்டும் என்று ஏன் கூறப்படுகின்றது? இவற்றை செய்ய வேண்டும் என்பது ஓர் அஹ்மதி முஸ்லிமுக்கு ஏன் அவசியமானது? என்பதைப் பற்றிய அறிவு அவர்களுக்கு இருக்க வேண்டும்.

உதாரணமாக, பொருள் தியாகம் இருக்கின்றது. அதைப் பற்றிய விளக்கத்தை மக்கள் அறிய விரும்புகின்றனர். இது தொடர்பான இரண்டாவது விசயம் பொறுப்பாளர்களுக்கு சில நிர்வாகப் பொறுப்புகள் இருக்கின்றன. அவற்றை எவ்வாறு அவர்கள் நிறைவேற்ற வேண்டும்? எந்த அளவு அவர்களுக்கு அதில் அதிகாரம் இருக்கின்றது? என்பதைப் பற்றி கூற வேண்டியதுள்ளது. எவ்வாறிருப்பினும், சுருக்கமாக இந்த இரண்டு விசயங்கள் பற்றியும் கவனமூட்டுவேன்.

முதலாவது விசயம் கொள்கையுடன் தொடர்புடையதாகும். ஓர் அஹ்மதி இதைப் பற்றி அறிந்திருப்பது அவசியமானதாகும். பொதுவாக இதைப் பற்றி விளக்கிக் கூறப்படுகிறது. ஆனால் இதன் பக்கம் கவனம் செலுத்தாமல் இருக்கின்றனர் அல்லது நம் மக்களுக்கும் தர்பிய்யத் தேவைப்படுகின்றது என்பதை கருத்தில் கொள்ளாமல் இருக்கின்றார்கள். பொதுவாக ஒருவர் பிறப்பால் அஹ்மதியாக இருந்தால் அவருக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வருகையின் நோக்கம் என்ன? என்பதைப் பற்றியும், அவர்களை ஏற்றுக் கொள்வது ஏன் அவசியமானது? என்பதைப் பற்றியும் அறிவு இருக்கும் என்று கருதுகின்றனர். புதிதாக வருபவர்களுக்கு இதைப் பற்றி நன்றாக தெரியும். அவர்கள் ஆராய்ச்சி செய்த பின்னர் ஜமாஅத்தில் இணைகின்றனர்.

ஆனால் நான் ஏற்கனவே கூறியது போன்று ஆக்டிவ் ஆக இல்லாதவர்கள் இஜ்திமாக்களிலும் வருவதில்லை. சிலர் மாநாடுகளுக்கு கூட வருவதில்லை. ஒவ்வொரு நாட்டிலும் அப்படிப்பட்ட மக்கள் இருக்கின்றனர். அவர்கள் குறைவான எண்ணிக்கையில் இருந்தாலும் அவர்களின் பக்கம் நாம் மிகுந்த கவலையுடன் கவனம் செலுத்த வேண்டும். இதற்காக குத்தாமுல் அஹ்மதிய்யாவும் லஜ்னா இமாயில்லாஹ்வும் தமது நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து இது தொடர்பான பணிகளைச் செய்ய வேண்டிய தேவை அதிகமாக இருக்கின்றது. இவ்வாறே ஜமாஅத் அமைப்பும் அப்படிப்பட்டவர்களை விரட்டுவதற்குப் பதிலாக அல்லது இவர்களை சீர்திருத்த முடியாது என்று கூறாமல் அவர்களை தங்களுக்கு அருகில் கொண்டு வர முயற்சி செய்ய வேண்டும். எனக்கு உங்களுடன் எந்தத் தொடர்பும் இல்லை என்று கூறுபவர்களைத் தவிர்த்து மற்றவர்களை நமக்கு அருகில் கொண்டு வர வேண்டும்.

ஆனால் அப்படிப்பட்டவர்களைப் பற்றிய தகவல்களை ஜமாஅத்தின் அமைப்பு அதாவது Main stream ஆகத் திகழ்கின்ற முழு ஜமாஅத்தின் அமைப்பு கிளை அமைப்புகளுக்கு தர வேண்டும். ஏனென்றால், அதிக வயதை உடைய பொறுப்பாளர்கள் கடுமையாக நடந்து கொண்டதன் விளைவாகவும் மக்கள் இவ்வாறு பதில் கூறி விடுகின்றனர். கிளை அமைப்புகள் இவர்களது வயதை ஒத்த அல்லது ஓரளவு இவர்களது இயல்பை ஒத்த நபர்கள் மூலமாக இவர்களது சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் செலுத்த முடியும். எங்கு இந்த வழிமுறை கடைபிடிக்கப்படுகின்றதோ அங்கு அல்லாஹ்வின் அருளால் இதில் வெற்றியும் கிடைத்திருக்கின்றது. சில இடங்களில் சில தர்பிய்யத் செயலர்கள் இப்படியும் இருக்கின்றார்கள். அவர்கள் தர்பிய்யத்திற்காக அப்படிப்பட்ட மக்களது மனநிலையை கண்முன் நிறுத்தி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளனர். அதற்கு நாம் விரும்பிய மிகச் சிறந்த நல்ல தாக்கம் ஏற்பட்டிருக்கின்றது. இந்த மக்களிடமிருந்து மிக நல்ல Response கிடைத்திருக்கின்றது.

எவ்வாறிருப்பினும், நாம் நம்மால் முடிந்த வரை ஒவ்வொரு அஹ்மதியும் வீணாகி விடுவதிலிருந்தும் அவரை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக முயற்சி செய்ய வேண்டும். இது ஒவ்வொரு பொறுப்பாளரது கடமையாகும். இது ஒவ்வொரு முரப்பியின் பொறுப்பாகும். ஒவ்வொரு மட்டத்திலும் உள்ள அமைப்புகள் மற்றும் ஜமாஅத் அமைப்பின் பொறுப்பும் ஆகும்.

இந்த அடிப்படையன விசயங்களைக் கூறிய பிறகு நான் ஏற்கனவே கூறியது போன்றே நான் கூறவுள்ள முதலாவது கருத்து ஒவ்வொரு அஹ்மதிக்கும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வருகையின் நோக்கம் என்ன? என்பதைப் பற்றி தெரிந்திருக்க வேண்டும். மேலும் அவர்களை ஏற்றுக் கொள்வது ஏன் அவசியமானது என்பதைப் பற்றியம் அவர்களுக்கு தெரிந்திருக்க வேண்டும். இதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சொற்களிலேயே இதை எடுத்துக் கூறுவது தான் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது இழந்து போன மகிமையை மீண்டும் நிலைநிறுத்துவதற்காகவும் திருக்குர்ஆனின் உண்மையை உலகிற்குக் காட்டுவதற்காகவும் நான் அனுப்பப்பட்டுள்ளேன். மேலும் இந்த எல்லாப் பணியும் நடந்து கொண்டிருக்கின்றது. ஆனால் எவர்களது கண்களில் திரை இருக்கின்றதோ அவர்கள் அதைப் பார்க்க முடியாது. ஆனால் இந்த இயக்கம் சூரியன் போன்று பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. இதன் அத்தாட்சிகளுக்கும் அடையாளங்களுக்கும் எந்த அளவு மக்கள் சாட்சிகளாக இருக்கின்றனர் என்றால், அந்த காட்சிகளை ஓரிடத்தில் ஒன்றுசேர்த்தால் அதன் எண்ணிக்கை எந்த அளவு இருக்கும் என்றால் பூமியில் எந்தவொரு அரசனுக்கும் கூட அந்த அளவு எண்ணிக்கையில் இராணுவம் இருக்காது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எந்த அளவு இந்த இயக்கத்தின் உண்மைக்கான சான்றுகள் உள்ளன என்றால், அவை அனைத்தையும் எடுத்துக் கூறுவது எளிதல்ல. இஸ்லாத்திற்கு கடுமையான இழிவு ஏற்பட்டது. பிறகு அல்லாஹ் இதே இழிவான நிலைக்கேற்ப அதை அகற்றுவதன் மூலம் இந்த இயக்கத்தின் மகிமையை வெளிப்படுத்திக் காட்டியுள்ளான்.

இவை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாழ்நாளில் நடந்த விசயம் மட்டுமல்ல. மாறாக, அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் தகுதி தொடர்பாகவும் திருக்குர்ஆனின் உண்மையை உலகில் நிலைநாட்டுவது பற்றியும் தமது Literature களிலும், தமது நூல்களிலும், தமது கட்டளைகளிலும் எவ்வாறு இதைப் பற்றி எடுத்துக் கூறியிருக்கின்றார்கள் என்றால் இது இன்றும் கூட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகிமையையும் திருக்குர்ஆனின் உண்மையையும் எதிரிகளுக்கு நிரூபித்துக் காட்டிக் கொண்டிருக்கின்றது.

நான் பல்வேறு சமயங்களில் பல்வேறு உதாரணங்களைக் கூறியுள்ளேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வாழ்க்கையின் உண்மையான அம்சங்களை மாற்று மதத்தவர்களுக்கு எடுத்துக் கூறும் போது இதுதான் அவர்களது வாழ்க்கை என்றால், மேலும் இதுதான் அவர்களது போதனை என்றால் நாங்கள் தவறிழைத்திருக்கின்றோம் என்று கூறும் கட்டாயத்திற்கு அவர்கள் ஆளாகியுள்ளனர்.

கனடாவில் உள்ள இஸ்லாத்தின் எதிரி ஒருவரைப் பற்றி நான் சில நாட்களுக்கு முன் நிகழ்த்திய எனது சொற்பொழிவில் கூறியிருந்தேன். அவர் தனது பத்திரிகையில் டென்மார்க் பத்திரிகை வெளியிட்டிருந்த கார்டூனை வெளியிட்டிருந்தார். இந்த முறை அங்கு நான் சுற்றுப்பயணம் மேற்கொண்ட சமயத்தில் நான் கூறிய விசயங்களைக் கேட்டு இஸ்லாத்தின் அழகிய போதனைகள் பற்றி அவருக்கு தெரிந்த போது, அஹ்மதிய்யா ஜமாஅத் கூறிய கருத்துக்களைக் கேட்டு எனக்கு உண்மை தெரிய வந்தது என்று தமது பத்திரிகையில் அவர் எழுத வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானார். அவர் தமது தவறை ஏற்றுக் கொண்டார்.

இவ்வாறே கடந்த குத்பாவில் நான் கூறியிருந்தேன். அமெரிக்காவில் ஒரு பெரிய அரசியல்வாதி ஜுமுஆ தொடர்பாக தவறான ஒரு நிகழ்ச்சியை ரேடியோவில் ஒலிபரப்பி இருந்தார் அல்லது அதைப் பற்றி அவர் பேசியிருந்தார். இந்த நிகழ்ச்சியை கேட்டவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாகும். இலட்சக்கணக்கான மக்கள் இதகை் கேட்டுள்ளனர். இதற்கு எதிரில் திருக்குர்ஆனின் அடிப்படையில் ஜுமுஆவின் முக்கியத்துவமும் அதன் உண்மை நிலையும் என்ன? என்பதைப் பற்றி நமது ஓர் அஹ்மதி இளைஞர் இணையதளத்தில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். பிறகு இந்த நபருக்கும் இது பற்றி கடிதம் எழுதப்பட்டது. இவர் அங்குள்ள ஒரு பெரிய அரசியல் தலைவர் ஆவார். புகழ்பெற்ற மனிதர் ஆவார். நீங்கள் தவறாகப் பேசியிருக்கின்றீர்கள். இப்போது எங்களுக்கும் ரேடியோவில் பேச நேரம் தாருங்கள் என்று இவருக்கு எழுதினோம். பிறகு அவர் இதற்காக நேரத்தை வழங்கினார். இது அவரது நேர்மையான நடைமுறையாகும். பிறகு நமது அஹ்மதி இளைஞர் ஒருவர் அல்லாஹ்வின் அருளால் ரேடியோவில் ஜுமுஆ பற்றியும் திருக்குர்ஆனின் புனிதத் தன்மை பற்றியும் பேசினார். அதைக் கேட்டு விட்டு அந்த அரசியல் தலைவர் தன்னுடைய தவறை ஏற்றுக் கொண்டார். இந்த நிகழ்ச்சியையும் இலட்சக்கணக்கான மக்கள் கேட்டுள்ளனர்.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மூலமாகத்தான் எங்களுக்கு உண்மையான இஸ்லாம் பற்றி தெரிந்திருக்கின்றது என்பதையும் அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர். இவற்றைப் பற்றியும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு எடுத்துக் கூறினார்கள். நமக்கு உண்மையை வெளிப்படுத்திக் காட்டினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உயர் தகுதியை உலகிற்கு எடுத்துக் காட்டியும், திருக்குர்ஆனின் போதனைகளின் உண்மையை வெளிப்படுத்திக் காட்டவும் அவர்களை அல்லாஹ் அனுப்பி வைத்தான்.

அவர்கள் கூறியது போன்றே இஸ்லாத்தின் மகிமையும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகிமையும், திருக்குர்ஆனின் மகிமையும் பெருமையும் உலகில் அவர்கள் மூலமாகத்தான் நிலைநாட்டப் பட்டிருக்கின்றது. நாம் எந்தவொரு தாழ்வு மனப்பான்மைக்கும் இரையாவதற்கான எந்தக் காரணமும் இருக்க முடியாது. இளைஞர்கள் இவ்விசயத்தில் தைரியமாக இருக்க வேண்டும். எங்கெல்லாம் இளைஞர்கள் Active ஆக இருக்கின்றார்களோ அங்கெல்லாம் இறைவனின் அருளால் அவர்கள் எதிரிகளின் வாயை அடைத்து விடுகின்றனர்.

பிறகு நம்மில் ஒவ்வொருவருக்கும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொள்வதன் அவசியம் என்ன? என்பதைப் பற்றியும் தெரிந்திருக்க வேண்டும். 13 அல்லது 14 வயது நிரம்பிய சிறுவர்கள் கூட இந்தக் கேள்வியைக் கேட்கின்றனர். பெற்றோர்கள் அவர்களுக்கு சரியான பதிலைக் கூறுவதில்லை. இதைப் பற்றி மீண்டும் நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சொற்களிலேயே எடுத்துக் கூறுகின்றேன். அவர்களது மிக விளக்கமான ஒரு கட்டளையாகும். கிளை அமைப்புகள் இந்த மேற்கோளை பல பகுதிகளாகப் பிரித்து அவற்றின் மூலமாக

புரிய வைக்க முடியும். மேலும் அதிலிருந்து வழிகாட்டலைப் பெற முடியும். ஒரு சந்தர்ப்பத்தில் சில மவ்லவிகள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் நாங்கள் தொழுகின்றோம். நோன்பும் நோற்கின்றோம். குர்ஆன் மீதும், ரஸூல் (ஸல்) அவர்கள் மீதும் ஈமான் கொண்டுள்ளோம். பிறகு உங்களை நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டிய தேவை என்ன இருக்கின்றது? என்று கேள்வி கேட்டனர்.

அதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், பாருங்கள்! எவ்வாறு ஒரு நபர் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் அவனது வேதத்தையும் ஏற்றுக் கொள்வதற்காக வாதம் செய்து விட்டு அதன் விளக்கமான கட்டளைகளை அதாவது உதாரணமாக தொழுகை, நோன்பு, ஹஜ், ஸக்காத், தக்வா, தூய்மை ஆகியவற்றைக் கடைபிடித்து அவற்றை நிறைவேற்றாமல் இருந்தால், நஃப்ஸை தூய்மைப்படுத்துதல், தீமையை கை விடுதல், நன்மையைப் பெறுதல் ஆகியவற்றிற்காக இடப்பட்ட அக்கட்டளைகளை கைவிட்டு விட்டால் அவர் தன்னை முஸ்லிம் என்று கூறிக் கொள்ள தகுதியற்றவராவார்.

தான் ஒரு முஸ்லிம் என்று வாதம் செய்து விட்டு நன்மைகளைச் செய்யாமலும் தீமைகளை கைவிடாமலும் இருந்தால் அவர் தன்னை முஸ்லிம் என்று கூறிக்கொள்ள தகுதியற்றவராவார் என்று கூறுகின்றார்கள். அவர் ஈமானின் அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளார் என்று கூற முடியாது. அது அவருக்கு பொருந்தாது.

இவ்வாறே எந்த ஒரு நபர் வாக்களிக்கப்பட்ட மஸீஹை ஏற்றுக் கொள்ளவில்லையோ, மேலும் அவரை ஏற்றுக் கொள்ள வேண்டிய தேவையில்லை என்று கருதுகின்றாரோ அவரும் இஸ்லாத்தின் உண்மைநிலை, நபித்துவத்தின் குறிக்கோள், தூதுத்துவத்தின் நோக்கம் ஆகியவற்றை அறியாதவராக இருக்கின்றார். அதாவது நபித்துவத்தின் தேவை என்ன? அதன் குறிக்கோள் என்ன? என்பதைப் பற்றி அவருக்கு தெரியாது. தன்னை உண்மையான முஸ்லிம் என்றும் இறைவனுக்கும் தூதருக்கும் உண்மையான முறையில் கீழ்படிந்து நடப்பவர் என்றும், கட்டுப்பட்டு நடப்பவர் என்றும் கூறுவதற்கான உரிமை அவருக்கு இல்லை.

ஏனென்றால் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக திருக்குர்ஆனின் கட்டளைகளை தந்துள்ளது போன்றே, இறுதிக் காலத்தில் ஒரு இறுதி கலீஃபா தோன்றுவது பற்றிய முன்னறிவிப்பையும் மிகவும் வலுவாக அவன் எடுத்துக் கூறியுள்ளான். அவரை ஏற்றுக் கொள்ளாதவர் மற்றும் அவரை விட்டு முகம் திருப்பிச் செல்பவர் ஆகியோருக்கு கட்டுப்படாதவர்கள் என்று அவன் பெயர் சூட்டியுள்ளான். திருக்குர்ஆனிலும் ஹதீஸிலும் உள்ள சொற்களில் உள்ள வித்தியாசம் – அதனை வித்தியாசம் என்று கூற முடியாது. மாறாக ஹதீஸ்களில் வேறு சொற்களில் திருக்குர்ஆனிலுள்ள சொற்களின் விளக்கம் கூறப்பட்டுள்ளது. அதாவது அவை இவை மட்டும் தான். திருக்குர்ஆனில் கலீஃபா என்ற சொல் கூறப்பட்டுள்ளது. ஹதீஸில் இதே இறுதி கலீஃபாவை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்ற பெயரில் விளக்கிக் கூறப்பட்டிருக்கின்றது. திருக்குர்ஆனில் எந்த நபரை அனுப்புவது பற்றி 'வாக்குறுதி' என்ற சொல் கூறப்பட்டுள்ளதோ அவ்வாறே எந்த நபரின் தோற்றம் தொடர்பாக ஒரு விதத்தில் அதற்கு மகத்துவம் வழங்கப்பட்டிருக் –கின்றதோ அப்படிப்பட்டவரை ஏற்றுக் கொள்ள வேண்டிய தேவை என்ன இருக்கின்றது என்று கூறுபவர் எவ்வாறு முஸ்லிமாக இருக்க முடியும்?

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

கலீஃபாக்களின் வருகையை அல்லாஹ் கியாமத் வரையில் நீட்டியுள்ளான். இஸ்லாத்தில் இந்த பெருமையும் சிறப்பும் இருக்கின்றது. அதற்கு ஆதரவாகவும் அதன் மறுமலர்ச்சிக்காகவும் ஒவ்வொரு நூற்றாண்டிலும் சீர்திருத்தவாதிகள் வந்தனர். வந்து கொண்டே இருப்பார்கள். பாருங்கள்! அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுடன் ஒப்பிட்டுக் கூறியுள்ளான்.

இங்கு முஜத்தித் தொடர்பாக மக்களுக்கு தவறு ஏற்பட்டு விடுகின்றது. சீர்திருத்தவாதிகள் வந்து கொண்டே இருப்பார்கள் என்றால் அவர்கள் யார்? என்ற கேள்வி எழலாம். கலீஃபாக்களே முஜத்தித்துகளாக இருப்பார்கள். இதைப் பற்றியும் விளக்கமாக இதற்கு முன்பு ஒரு குத்பாவில் நான் எடுத்துக் கூறியுள்ளேன். அதிலிருந்தும் குறிப்புகளை எடுத்துக் கொள்ளலாம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் இதைப் பற்றி விளக்கமாக எடுத்துக் கூறியுள்ளார்கள். இவை அனைத்தும் ஜமாஅத்தின் Literature களிலும் இடம்பெற்றுள்ளது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

பாருங்கள்! அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுடன் ஒப்பிட்டுக் கூறியுள்ளான். இது கமா (73:16) அதாவது 'போன்ற' என்ற சொல்லிலிருந்து நிரூபணமாகின்றது. ஹஸ்ரத்

மூஸா (அலை) அவர்களது தொடரின் இறுதி கலீஃபாவாக ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இருக்கின்றார்கள். நான் இறுதி செங்கலாக உள்ளேன் என்று இதைப் பற்றி அவர்களே கூறியுள்ளார்கள். இவ்வாறே முஹம்மதிய சரீஅத்திலும் அதற்காக தொண்டாற்றுவதற்காகவும், அதன் மறுமலர்ச்சிக்காகவும் எப்போதும் கலீஃபாக்கள் வந்துள்ளனர். இவ்வாறு கியாமத் வரை அவர்கள் வந்து கொண்டிருப்பார்கள்.

இவ்வாறே இதன் இறுதி கலீஃபாவின் பெயரும் அவருக்குள்ள ஒப்புமைக்கு ஏற்பவும், அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளுக்கு ஏற்பவும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்று வைக்கப்பட்டுள்ளது. பிறகு மிகவும் சாதாரணமாக அவரைப் பற்றி கூறிவிட்டு விட்டுவிடவில்லை. மாறாக அவரது வருகைக்கான அடையாளங்கள் விளக்கமாக எல்லா இறை வேதங்களிலும் கூறப்பட்டிருக்கின்றன. பைபிளிலும், இஞ்சீலிலும், நபிமொழிகளிலும், திருக்குர்ஆனிலும் கூட அவரது வருகைக்கான அடையாளங்கள் கூறப்பட்டிருக்கின்றது. யூதர்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் ஆகிய எல்லா சமயங்களைச் சார்ந்த சமுதாயங்களும் அவரது வருகையை ஏற்றுக் கொள்வதுடன் அவருக்காக காத்திருக்கின்றனர். அவ்வாறிருக்க அன்னாரை மறுப்பது எவ்வாறு இஸ்லாமாக இருக்க முடியும்? பிறகு அவர் எப்படிப்பட்ட நபராக இருக்கின்றார் என்றால், அல்லாஹ் வானத்திலும் அவருக்கு ஆதரவான அடையாளங்களை வெளிப்படுத்திக் காட்டியுள்ளான். பூமியிலும் அற்புதங்களைக் காட்டியுள்ளான். அவருக்கு ஆதரவாக பிளேக் நோய் வந்தது. சூரிய சந்திர கிரகணங்கள் முன்னறிவிப்புகளில் கூறியிருந்தபடி குறிப்பிட்ட நேரத்தில் வெளிப்பட்டன. எந்த நபருக்கு ஆதரவாக வானம் அடையாளங்களை வெளிப்படுத்தியதோ, மேலும் பூமியும் அந்த சரியான சமயத்தில் அவர் தோன்றியுள்ளார் என்று கூறுகிறதோ அவர் ஒரு சாதாரண நபராக இருக்க முடியுமா? அவரை ஏற்றுக் கொள்வதும் ஏற்றுக் கொள்ளாமல் இருப்பதும் சமமானதாக இருக்க முடியுமா? அவரை ஏற்றுக் கொள்ளாமல் ஒருவர் முஸ்லிமாகவும் இறைவனின் அன்பிற்குரிய அடியாராகவும் இருக்க முடியுமா? ஒருபோதும் முடியாது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நினைவில் கொள்ளுங்கள்! வாக்களிக்கப்பட்ட நபர் வருவதற்கான எல்லா அடையாளங்களும் நிறைவேறி விட்டன. எல்லா விதமான குழப்பங்களும் உலகை அசுத்தமாக்கி விட்டது. ஆலிம்களும் பெரும்பாலான அவ்லியாக்களும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றும் காலம் இதுதான் என்று எழுதியுள்ளார்கள். அதாவது அவர் 14 வது நூற்றாண்டில் வருவார் என்று எழுதியுள்ளார்கள். அவ்லியாக்களும் பெரும்பாலான ஆலிம்களும் கூறியுள்ள ஒருமித்த கருத்துடைய சாட்சியங்கள் இந்த அளவு இருந்தும் கூட ஒருவருக்கு சந்தேகம் இருந்தால் அவர் திருக்குர்ஆனை கவனத்துடன் பார்க்க வேண்டும். சூரா அந்நூரை கவனமாகப் படிக்க வேண்டும். எவ்வாறு ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு பிறகு 1400 வருடங்கள் கழித்து ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வந்தார்களோ அவ்வாறே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு 14வது நூற்றாண்டில் தான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வந்துள்ளார். எவ்வாறு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களது தொடரின் காத்தமுல் குலஃபாவாக இருக்கின்றார்களோ அவ்வாறே இங்கும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் காத்தமுல் குலஃபாவாக இருப்பார்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நான் இனிவரும் ஆயிரம் வருடங்களின் கலீஃபாவாக இருக்கின்றேன். எனவே எவர் இனி வந்தாலும் தம்மைப் பின்பற்றியே வருவார் என்றும் அவர்கள் கூறியுள்ளார்கள். எனவே எந்த முன்னறிவிப்புகள் திருக்குர்ஆனிலும் ஹதீஸிலும் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றதோ அதன் அடிப்படையில் எந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் 14வது நூற்றாண்டில் வர வேண்டியது இருந்ததோ அவர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் ஆவார்கள்.

ஒவ்வொரு அஹ்மதியும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது நூல்களை படிக்க வேண்டும். ஆங்கிலத்தில் புலமை பெற்றவர்கள் அல்லது உருது மொழி தெரியாதவர்களுக்காக ஒவ்வொரு மொழியிலும் அல்லாஹ்வின் அருளால் Literature கள் இருக்கின்றன. அவற்றில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வருகை பற்றியும் அதன் நோக்கம் பற்றியும் அவர்களை ஏற்றுக் கொள்வது ஏன் அவசியமானது? என்பதைப் பற்றியும் விளக்கமாக கூறப்பட்டிருக்கின்றது. தங்களது கொள்கையை உறுதியானதாகவும் வலுவானதாகவும் ஆக்கிக் கொள்ள வேண்டியது ஒவ்வொருவருக்கும் அவசியமானதாகும்.

ஆட்சேபனை செய்பவர்களின் ஆட்சேபனைகளுக்கு பதில் கூறுங்கள். பதில்களை நீங்களே தயார் செய்யும் போது இதுபற்றிய அறிவும் உங்களுக்கு கிடைக்கும். ஆட்சேபனைகளுக்காக பதில்களும் தயாராகி விடும். இதனை ஒவ்வொருவரும் சுயமாக செய்வதுடன் அதை தவிர ஜமாஅத் அமைப்பும் கிளை அமைப்புகளும் தங்களது நிகழ்ச்சிகளை

தயார் செய்ய வேண்டும். அதில் எவ்வாறு ஒவ்வொரு நபர் வரை நாம் இந்த போதனையை எட்ட வைக்க வேண்டும்? அதாவது அவர்களின் வருகையின் நோக்கம் என்ன? அவர்களை ஏற்றுக் கொள்வது ஏன் அவசியமானது? என்பதைப் பற்றி விளக்கிக் கூற வேண்டும்.

முதலில் கொள்கை தொடர்பான விசயங்களைக் கூறி விட்டேன். இரண்டாவது கருத்து தர்பிய்யத் தொடர்பு பற்றியதாகும். அது ஜமாஅத்திலுள்ள நபர்களுக்கு கிலாஃபத்துடன் உள்ள தொடர்பாகும். கிலாஃபத்துடன் உள்ள தொடர்பில் இன்றைய நாட்களில் அல்லாஹ்வின் அருளால் அல்லாஹ் நமக்கு M.T.A. வை அதற்கான ஒரு ஊடகமாக வழங்கியுள்ளான். இவ்வாறே alislam website இருக்கின்றது. இதனோடு ஒவ்வொரு அஹ்மதி இளைஞரையும், ஆணையும், பெண்ணையும் இணைத்து வைப்பதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். ஜமாஅத் அமைப்பும், கிளை அமைப்புகளும் இதற்காக முயற்சிகளைச் செய்ய வேண்டும். தூய்மையான உள்ளம் கொண்டவர்கள் அதிலும் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்கின்ற தூய்மையான உள்ளம் கொண்டவர்கள் பெரும் எண்ணிக்கையில் இருக்கின்றார்கள். அவர்கள் பெரும் முயற்சி செய்து இங்கு பள்ளிவாசலுக்கு வருகின்றனர். குத்பாவை கேட்கின்றனர். உலகின் பல்வேறு பகுதிகளில் M.T.A. மூலமாகவும் பலரும் குத்பாக்களைக் கேட்கின்றனர். முறையாக தொடர்ந்து கேட்டு வருகின்றனர். இன்னும் சொல்வதென்றால் சிலர் இரண்டு அல்லது மூன்று முறை குத்பாவைக் கேட்பதாக கடிதத்தில் எனக்கு எழுதுகின்றனர். ஆனால் குத்பா கேட்காதவர்களின் எண்ணிக்கையும் இருக்கின்றது. இங்கு U.K.விலும் அத்தகைய மக்கள் இருக்கின்றார்கள். அவர்கள் குத்பாக்களை கேட்பதில்லை. மற்ற நிகழ்ச்சிகளையும் பார்ப்பதில்லை. சில நிகழ்ச்சிகளில் அவர்கள் கலந்து கொள்வதுமில்லை.

ஒரு ஜமாஅத்தில் பெரும் எண்ணிக்கையில் மக்கள் ஜமாஅத்தின் போதனைக்கு மாற்றமான சில செயல்களைச் செய்தனர். இதன் காரணமாக வேறு வழியின்றி அவர்கள் மீது சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஆய்வு செய்து பார்த்த போது அவர்களில் பெரும்பாலார் குத்பாக்களை கேட்பதில்லை அல்லது அவர்களில் பலரும் ஜமாஅத்திற்கு Active ஆக வந்து போவதுமில்லை என்று தெரிய வந்தது. அவர்கள் ஜமாஅத் நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வதில்லை. ஆனால் ஜமாஅத்துடன் உள்ள தொடர்பு அவர்களது இரத்தத்துடன் கலந்திருந்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்களுக்கு தண்டனை விதிக்கப்பட்ட போது அவர்கள் கவலை அடைந்தனர். மிகவும் அளவு கடந்த கவலையுடனும் வேதனையுடனும் மன்னிப்புக்கோரி அவர்கள் எனக்கு கடிதம் எழுத ஆரம்பித்து விட்டனர். அவர்களில் சிலர் என்னைச் சந்தித்தனர். அப்போது அவர்கள் அழுதனர். அவர்கள் உலகவாதிகளாக மட்டும் இருந்தால் அவர்களிடம் இந்த நிலை இருந்திருக்காது. உலக வியாபரங்களில் ஈடுபடுவதன் காரணமாக இவ்விசயங்களைப் பொருட்படுத்தாமல் இருப்பவர்களும் இருக்கின்றார்கள். அவர்களுக்கு இது பற்றி கவனமூட்டப்படும் போது அவர்களிடம் வெட்க உணர்வும் ஏற்படுகின்றது. பிறகு அவர்கள் தவ்பா, இஸ்திக்ஃபார் செய்கின்றனர். எதிர்காலத்தில் ஜமாஅத்துடன் தங்களுக்கு இருக்கும் தொடர்பை வலுவுள்ளதாக ஆக்குவதற்கு அவர்கள் முயற்சி செய்கின்றனர். இவற்றை நினைவூட்டுவதும் இதை கண்காணிப்பதும் ஜமாஅத் அமைப்பு, ஜமாஅத் செயலர்கள், முபல்லிக்குகள், கிளை அமைப்புகள் ஆகிய எல்லாரது பணியாகும். கிலாஃபத்துடன் ஒவ்வொரு நபருக்கும் தனிப்பட்ட முறையில் தொடர்பை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்யுங்கள். உள்ளங்களில் கிலாஃபத்துடன் உள்ள தொடர்பு, பற்று ஆகியவற்றை மெருகூட்ட முயற்சி செய்யுங்கள். அது அவர்களிடம் ஏற்கனவே இருக்கத்தான் செய்கின்றது. அவர்களுக்கு அதைப் பற்றி புரிய வைத்தால் மக்கள் மேலும் பொலிவுடன் நம் முன்னால் அவற்றை வெளிப்படுத்துகின்றனர். அதில் ஏதாவது தூசி படிந்திருந்தாலும் கூட அவை அகன்று விடுகின்றன. ஏனென்றால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் போது தான் அவர்கள் தமது பற்றை வெளிப்படுத்துகின்றனர். அந்த சமயத்தில் தான் அதனை அவர்கள் வலுவாக வெளிப்படுத்திக் காட்டுகின்றனர். தர்பிய்யத் துறை அவர்கள் தொடர்ந்து காலத்தின் கலீஃபாவுடன் நிரந்தர தொடர்பு வைத்திருக்க வேண்டும் என்று அவர்களுக்கு போதனை செய்து வந்தால், குத்பாக்கள், மாநாடுகள் மற்றும் அனைத்து நிகழ்ச்சிகளையும் அவர்கள் பார்க்க வேண்டும் என்று அவர்களுக்கு கவனமூட்டி வந்தால் பிறகு எங்கு கிலாஃபத்துடன் மேலும் வலுவான தொடர்பு ஏற்படுமோ அங்கு தர்பிய்யத் தொடர்பான பல பிரச்சனைகளுக்கும் தீர்வு ஏற்பட்டு விடும் இன்சா அல்லாஹ்.

பிறகு நான் கவனமூட்ட விரும்பும் அடுத்த அம்சம் ஜமாஅத்திலுள்ள நபர்களிடம் சந்தாவின் முக்கியத்துவத்தைப் பற்றி விளக்கமாக எடுத்துக் கூறுவதாகும்.

நினைவில் கொள்ளுங்கள்! பொதுவாக நான் ஜமாஅத்தின் பொருளாளர்களுக்கு இதைப் பற்றி கூறியிருக்கின்றேன். அவர்கள் மக்களுக்கு இதை எடுத்துக் கூற வேண்டும். அதாவது சந்தா என்பது வரி அல்ல. மாறாக அது கடமைகளில் ஒன்றாகும். அதை நிறைவேற்றும்படி அல்லாஹ் திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில் கட்டளையிட்டுள்ளான்.

**உதாரணமாக, ஓரிடத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:**

فَاتَّقُوا اللَّهَ مَا اسْتَطَعْتُمْ وَاسْمَعُوا وَأَطِيعُوا وَأَنْفِقُوا خَيْرًا لِأَنْفُسِكُمْ ۗ
وَمَنْ يُوقَ شُحَّ نَفْسِهِ فَأُولَٰئِكَ هُمُ الْمُفْلِحُونَ

إِنْ تُقْرِضُوا اللَّهَ قَرْضًا حَسَنًا يُضَاعِفْهُ لَكُمْ وَيَغْفِرْ لَكُمْ ۚ وَاللَّهُ شَكُورٌ حَلِيمٌ

*உங்களால் இயன்றவரை நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சி, செவிசாய்த்துக் கீழ்ப்படிந்து (அவனது வழியில்) செலவு செய்யுங்கள். இது உங்களுக்கே மிக நல்லதாகும். தங்கள் உள்ளத்தின் கருமித்தனத்திலிருந்து காப்பாற்றப்படுபவர்களே வெற்றி பெறுபவர்களாவர்.*

*நீங்கள் அல்லாஹ்வுக்கு அழகிய கடனாகக் கடன் கொடுத்தால், அவன் அதனை உங்களுக்குப் பன்மடங்காக்கித் தருவதுடன் உங்களை மன்னித்தருள்வான். அல்லாஹ் மிக்க மதிப்பளிப்பவனும், சகித்துக் கொள்பவனுமாவான். (64:17-18)*

இந்த வசனங்களில் இறைவனது வழியில் செலவு செய்வது ஒரு நம்பிக்கையாளருக்கு மிகவும் அவசியமானதாகும் என்பது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இறைவனின் வழியில் செலவு செய்பவர்கள் தான் வெற்றி பெறுபவர்களாக இருக்கின்றனர். மேலும் இறை வழியில் நீங்கள் செலவு செய்வது என்பது அல்லாஹ்வுக்கு நீங்கள் கடன் கொடுப்பது போன்றதேயாகும். அல்லாஹ் அடியானுக்கு அவன் செய்த தியாகத்திற்குப் பதிலாக அதைவிட பன்மடங்கு அதிகமாக அதை பெருக்கி அதை அவனுக்கு வழங்குகின்றான். அத்தகைய பல்வேறு சம்பவங்களை மக்கள் எனக்கு எழுதுகின்றனர். அதாவது நாங்கள் இறைவனின் வழியில் சந்தா கொடுத்தோம். அல்லாஹ் எங்களுக்கு அதனை பன்மடங்காக பெருக்கி திரும்பத் தந்தான் என்று எழுதியுள்ளனர். இதைப் பற்றி பல முறை நான் பல்வேறு சம்பவங்களை எடுத்துக் கூறியுள்ளேன்.

அல்லாஹ் தன்னிறைவு பெற்றவனாகவும், தேவைகள் அற்றவனாகவும் இருக்கின்றான். அவனுக்கு நமது பைசாக்களின் தேவை இல்லை. உண்மையில் நம்மை தூய்மைப்படுத்துவதற்கும் நமது கீழ்படிந்து நடப்பதன் தரத்தை பார்ப்பதற்காகவும் தக்வாவின் வழிகளை நாம் தேடுவதைப் பார்ப்பதற்காகவும் பொருளாதார தியாகம் தொடர்பாக நாம் செய்கின்ற வாதத்தின் தரத்தை பார்ப்பதற்காகவும் அல்லாஹ் அவனது வழியில் செலவு செய்யுமாறு கூறுகின்றான். அவனது மார்க்கத்தைப் பரப்புவதற்காகவும் அதை முன்னேற்றுவதற்காகவும் செலவு செய்யுங்கள் என்று கூறுகின்றான். எனவே ஒவ்வொரு அஹ்மதிக்கும் இந்த ஆன்மாவை புரிந்து கொள்ள வேண்டிய தேவை இருக்கின்றது.

நாம் ஏன் சந்தா கொடுக்கின்றோம்? பொருளாளர் அல்லது ஜமாஅத்தின் தலைவரை மிகழ்விப்பதற்காக நாம் சந்தா கொடுக்கின்றோமா? அல்லது அவர்களிடமிருந்து நம்மை விடுவித்துக் கொள்வதற்காக நாம் சந்தா கொடுக்கின்றோமா? அப்படிப்பட்ட சந்தாக்களினால் எந்த பலனும் ஏற்படாது. அவ்வாறு கொடுக்காமல் இருப்பது தான் சிறந்ததாகும். நீங்கள் மற்றவர்களுடன் போட்டி போட்டுக் கொண்டு போட்டியை நோக்கமாக வைத்து மற்றவர்களை விட அதிகமாக சந்தா கொடுத்தால் அதனாலும் எந்த பலனும் கிடைக்காது. இறைவனின் திருப்தியை பெறுவதைத் தவிர சந்தா கொடுப்பதற்கு வேறு எந்த காரணம் இருந்தாலும் அது இறைவனிடத்தில் ரத்து செய்யப்பட்டு விடும்.

எனவே சந்தா கொடுப்பவர்கள் இறைவன் அவர்கள் மீது செய்துள்ள அருளாக அதை எண்ண வேண்டும். அல்லாஹ் அவர்களுக்கு சந்தா கொடுப்பதற்கான நல்வாய்ப்பை வழங்கியுள்ளான். அவ்வாறில்லாமல் எந்தவொரு நபரும் சந்தா கொடுப்பது அல்லாஹ்வின் மீது அல்லது அல்லாஹ்வின் ஜமாஅத்தின் மீது அவர் செய்யும் அருளாக இருக்க முடியாது. சந்தா கொடுப்பவருக்கு சந்தா கொடுத்து இறைவனின் அருள்களுக்கு வாரிசாக முயற்சி செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருக்க வேண்டும். இறைவனின் ஜமாஅத்துகளுக்கு பொருள் தியாகம் மிகவும் முக்கியமான ஒன்றாகும். எனவேதான் நான் ஜமாஅத்துகளிடம் அவர்கள் புதிதாக பைஅத் செய்தவர்களையும் குழந்தைகளையும் தஹ்ரீகே ஜதீத் மற்றும் வக்ஃபே ஜதீது சந்தாக்களில் அதிகமாக பங்குபெற வைக்க வேண்டும் என்று கூறியிருந்தேன். ஒரு பைசா செலுத்தியவாறு அவர்கள் அதில் பங்கு பெற வேண்டும். அதன் மூலம் அதற்கான பழக்கம் அவர்களுக்கு ஏற்பட்டு விடும். அதனால் அல்லாஹ்வின் அருள்களை சேகரிப்பவர்களாக அவர்கள் ஆகிவிட வேண்டும்.

**சந்தாவின் முக்கியத்துவத்தைப் பற்றி ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

உலகில் மனிதன் செல்வத்தை மிகவும் அதிகமாக நேசிக்கின்றான். இதன் காரணமாகவே கனவுகள் பற்றிய விளக்கத்தில் ஏதாவது ஒரு நபர் தமது கல்லீரலை எடுத்து எவருக்காவது கொடுப்பதாக கனவில் பார்த்தால் அதன் பொருள்

செல்வமாகும் என்று எழுதப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே உண்மையான இறையச்சத்தையும் ஈமானையும் பெறுவதற்காக,

لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ

***உங்களுக்கு மிகவும் பிரியமான பொருளை செலவு செய்யாத வரை உண்மையான நன்மையை நீங்கள் பெற முடியாது. (3:93)*** என்று இறைவன் கூறுகின்றான்.

இறைவனது படைபினங்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வது மற்றும் நல்ல முறையில் நடந்து கொள்வது ஆகியவற்றில் ஒரு பெரும் பகுதி செல்வத்தை செலவு செய்வதுடன் தொடர்புடையதாகும். மனித இனத்துடனும் இறைவனின் படைப்பினங்களுடனும் அனுதாபத்துடன் நடந்து கொள்வதும் ஒரே விதமான செயலே ஆகும். அது இல்லாமல் ஈமான் முழுமையானதாகவும் உறுதியானதாகவும் ஆக முடியாது. எதுவரை மனிதன் தியாகம் செய்வதில்லையோ அதுவரை அவன் மற்றவர்களுக்கு பலன் தரக்கூடியவனாக எப்படி இருக்க முடியும்? மற்றவர்களுக்கு பலன்தரக்கூடியவனாக இருப்பதற்கும் அனுதாபத்துடன் நடந்து கொள்வதற்கும் தியாகம் செய்வது அவசியமான ஒன்றாகும்.

لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ என்ற இந்த வசனத்தில் இந்த தியாகம் பற்றிய போதனையும் வழிகாட்டலும் தரப்பட்டுள்ளது. எனவே செல்வத்தை இறைவழியல் செலவு செய்வதும் கூட மனிதனின் நற்பாக்கியம், தக்வாவைப் பேணுவது ஆகியவற்றின் தரத்தையும் அதன் நறுமணத்தையும் வெளிப்படுத்துவதாக இருக்கின்றது. அபூபக்கர் (ரலி) அவர்களது வாழ்க்கையில் இறைவனுக்காக தன்னை அர்ப்பணிக்கும் அந்த தரமும் மனமும் எந்த அளவு இருந்ததென்றால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது ஒரு தேவையைப் பற்றி கூறியதுமே ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் தமது வீட்டிலுள்ள எல்லா பொருள்களையும் எடுத்துக் கொண்டு பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி விட்டார்கள்.

எனவே ஜமாஅத்தின் பொருளாளர்கள் இந்த வழிமுறைக்கேற்ப ஜமாஅத் சகோதரர்களுக்கு தர்பிய்யத் கொடுக்க வேண்டியது அவசியமானதாகும். பொருள் தியாகம் செய்யும் போதுதான் இறையச்சமும், ஈமானும் வலுவடைகின்றது. இவ்வாறே முரப்பிகளும் அவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் போது இதுபற்றி மக்களுக்கு போதனை செய்ய வேண்டும். இதற்காக தொடர்ந்து கவனம் செலுத்துவது அவசியமானதாகும்.

எனவே ஒவ்வொரு மட்டத்திலுள்ள பொருளாளர்களும் துடிப்புடன் செயல்பட வேண்டிய தேவை இருக்கின்றது. பொருளாளர்கள் தங்களது கடமைகளை நிறைவேற்ற வேண்டும். ஒவ்வொரு நபர் வரை தனிப்பட்ட முறையில் தொடர்பு கொள்வது ஜமாஅத்தின் பொருளாளரின் பணியாகும். அந்தப் பணியை அவர் கிளை அமைப்புகளிடம் ஒப்படைத்து விட்டு அந்தப் பணியை அவர்கள் செய்ய வேண்டும் என்று நினைக்கக் கூடாது. கிளை அமைப்புகள் தங்களது உறுப்பினர்களுக்கு இதைப் பற்றி போதனை செய்யும். இந்த அளவில் மட்டும் தான் அது உதவி செய்யும். இதை விட அதிகமாக ஜமாஅத்தின் பொருளாளர்களுக்கு உதவி செய்வது கிளை அமைப்புகளின் வேலை அல்ல. கிளை அமைப்புகள் தமது உறுப்பினர்களுக்கு இதைப் பற்றி கவனமூட்ட முடியும். பொருளாளர்களுக்கு ஒத்துழைப்பு கொடுங்கள் என்று அதனால் கூற முடியும். மேலும் சந்தாவின் ஆன்மாவை அவர்களுக்கு புரிய வைக்க முடியும்.

எவ்வாறிருப்பினும், சந்தாவின் ஆன்மா பற்றி புரிய வைப்பது கிளை அமைப்புகளின் பணியாகும். ஆனால் பொருளாளர்கள் நாங்கள் கிளை அமைப்புகளிடம் எடுத்துக் கூறினோம். ஆனால் அவர்கள் எங்களுக்கு உதவவில்லை என்று கூறி இவ்விசயத்தில் தனது பொறுப்பிலிருந்தும் விலகிவிட முடியாது. பொறுப்பு அவர்களைச் சார்ந்ததாகும். அவர்கள் தான் அதை நிறைவேற்ற வேண்டும்.

பொருளாளர்கள் உள்ளூர் அளவில் தமது பணியை செய்யும் போது ஒவ்வொரு வீடு வரை செல்ல அவர்கள் முயற்சி செய்ய வேண்டும். இப்போது அதிகமான வசதிகள் உள்ளன. போன் இருக்கின்றது. மற்ற பல வழிகளும் உள்ளன. போக்குவரத்து வசதியும் இருக்கின்றது. ஐரோப்பாவில் இன்னும் அதிகமான வசதியும் இருக்கின்றது. பாகிஸ்தானில் இப்படிப்பட்ட பொருளாளர்களும் இருக்கின்றனர். நாள் முழுவதும் வேலை செய்து விட்டு மாலையில் வேலை முடிந்ததும் மாலை முழுவதும் வீடுகளுக்குச் செல்வார்கள். கராச்சி, லாஹூர் போன்ற பெரும் நகரங்களில் சைக்கிளில் சவாரி செய்தவாறு அவர்கள் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு செல்வார்கள். அவர்கள் போதனை செய்து கொண்டிருப்பர். இதன் பக்கம் கவனமூட்டிக் கொண்டிருப்பர். இங்கு உங்களுக்கு பல வசதிகளும் உள்ளன. அவ்வாறிருந்தும் நீங்கள் பணிகளைச் செய்யாமல் இருக்கின்றீர்கள்.

சில பொறுப்பாளர்கள் தொடர்பான புகார்கள் இங்கு வந்துள்ளது. அதில் அவர்கள் கொடுக்கும் சந்தாவின் தரம் உயர்வானதாக இல்லை என்று கூறப்பட்டுள்ளது. அவர்களது சந்தாவின் தரம் இவ்வாறு இருந்தால் அவர்கள் மற்றவர்களுக்கு என்ன போதனை செய்ய முடியும்? அன்பாகவும் மென்மையாகவும் இந்தப் பணியை செய்ய வேண்டும். மக்களிடம் பொருள் தியாகத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி விளக்கமாக எடுத்துக் கூற வேண்டும். சிலர் கடினமான இயல்புடையவர்களாக இருப்பார்கள். ஒருமுறை அவர்கள் சந்தா கொடுக்க மறுத்து விட்டால் இரண்டாவது முறை அவர்களிடம் செல்லுங்கள். மூன்றாவது முறை செல்லுங்கள். நான்காவது முறை செல்லுங்கள். ஆனால் நீங்கள் முகம் சுளிக்கக் கூடாது.

எந்தவொரு நபருக்கும் அவருடைய சந்தாவினால் ஜமாஅத்தின் அமைப்பு செயல்படுகின்றது. அதனால் தான் பொருளாளர் மீண்டும் மீண்டும் அவரிடம் வருகின்றார் என்ற எண்ணம் வந்து விடக்கூடாது. ஒவ்வொருவரும் இதை நினைவில் கொள்ள வேண்டும். இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களிடம் அல்லாஹ் செய்துள்ள வாக்குறுதியாகும். அதாவது ஒருபோதும் பொருளாதாரத்தில் குறைவு ஏற்படாது. பணிகள் நடந்து கொண்டே இருக்கும் இன்சா அல்லாஹ்.

ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுக்கு கவலை இருந்ததென்றால் அது செல்வம் சரியான முறையில் செலவு செய்யப்படுகிறதா என்ற கவலையேயாகும். அல்லாஹ்வின் அருளால் செலவு சரியான முறையில் செய்யப்பட வேண்டும் என்பதற்காக முடிந்த வரையில் முயற்சி செய்யப்படுகின்றது. சில இடங்களில் செலவு செய்வதில் அக்கறையற்ற நிலை இருந்தால் அது தொடர்பாக அவர்களுக்கு கவனமூட்டப்படுகிறது. ஆடிட் அமைப்பும் இதற்காகத்தான் நிறுவப் -பட்டிருக்கின்றது.

பிறகு ஜமாஅத்தின் அமீரின் பொறுப்பாகவும் இது இருக்கின்றது. செலவீனங்கள் மீது அவருக்கு ஆழ்ந்த பார்வை இருக்க வேண்டும். எந்த Bill அவரிடம் வந்தாலும் அதை கண்டிப்பாக Pass செய்ய வேண்டும் என்ற நிலை இருக்கக் கூடாது. ஆடிட்டர் உடைய அமைப்பை நன்கு செயல்பட வைக்க வேண்டும். எந்த அளவு அதனை நல்ல முறையில் செயல்பட வைக்க வேண்டும் என்றால், ஆடிட்டிற்கு முழுமையான சுதந்திரம் வழங்க வேண்டும். அவரை தனது விருப்பத்திற்கேற்ப செயல்பட விட வேண்டும். அவருக்கு முழு அதிகாரம் வழங்க வேண்டும்.

செலவுகள் தொடர்பாகவும் நான் கூறுகின்றேன். M.T.A. –விற்காக மிகப்பெரும் செலவு இருக்கின்றது. இதற்காக தனியாகவும் பொருள் தியாகம் செய்யும்படி கூறப்படுகிறது. தர்பிய்யத்திற்காகவும் M.T.A. –விற்காகவும் செலவுகள் உள்ளன. இதன் செலவுகள் எந்த அளவு அதிகமாக உள்ளன என்றால் முழு உலகிலும் M.T.A. –விற்காக நான்கு அல்லது ஐந்து சேட்டிலைட்டுகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. M.T.A. –விற்காக வசூலாகும் தொகையிலிருந்து மட்டும் அதற்காக செலவு செய்யப்படுவதில்லை. மாறாக ஜமாஅத்தின் ஒட்டுமொத்த பட்ஜெட் தொகையிலிருந்தும் இதற்காக செலவு செய்யப்படுகின்றது. எனவே இதன் பக்கமும் மக்கள் கவனம் செலுத்த வேண்டும். U.K. மாநாட்டின் இரண்டாவது நாளில் நிகழ்த்தப்படும் சொற்பொழிவை நீங்கள் கவனமாகக் கேட்டால் ஒவ்வொருவருக்கும் அல்லாஹ் ஜமாஅத்தின் பைசாவில் எந்த அளவு பரக்கத்தை தந்துள்ளான்; எந்த அளவு பணி விரிவடைந்துள்ளது என்பது தெரிய வரும். பணிகள் எந்த அளவு விரிவடைந்துள்ளன. பிறகு அல்லாஹ் இந்த பைசாவிற்கு எத்தகைய கனிகளை தருகின்றான்? எவ்வாறு தருகின்றான்? என்பதும் தெரிய வரும். அல்லாஹ்வின் அருளால் இந்த எல்லா செலவுகளும் ஜமாஅத் சகோதரர்களின் பொருள் தியாகத்தின் மூலமாகவே நடக்கின்றது.

இதை தவிர சில நிர்வாக விசயங்கள் தொடர்பாகவும் நான் கவனமூட்ட விரும்புகின்றேன். நான் ஏற்கனவே கூறியது போன்றே காலத்தின் கலீஃபாவின் குத்பாக்களைக் கேட்பதும் மிகவும் அவசியமானதாகும். காலத்தின் கலீஃபா மற்ற தருணங்களில் கூறுகின்ற பல்வேறு அறிவுரைகளைக் குறிப்பெடுத்தும் அவற்றைப் பற்றி சிந்திப்பதும் மிகவும் அவசியமானதாகும். எங்கு ஜமாஅத்திலுள்ள நபர்களுக்கு பொறுப்பாளர்கள் இதைப் பற்றி கவனமூட்டுகின்றனரோ அங்கு பொறுப்பாளர்கள் சுயமாகவும் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். ஜமாஅத் அமீர் குறிப்பாக இந்த பணியைச் செய்ய வேண்டும். அதாவது குத்பாவில் ஏதாவது வழிகாட்டல் வழங்கப்பட்டிருந்தால் அல்லது தர்பிய்யத் தொடர்பான ஏதாவது அம்சம் கூறப்பட்டிருந்தால் அதை அவர் குறிப்பெடுக்க வேண்டும். பிறகு ஜமாஅத் தலைவர்களுக்கு அதைப் பற்றிய சுற்றறிக்கையை அனுப்ப வேண்டும். பிறகு எந்த அளவு இதற்கேற்ப செயல்படுகின்றனர் என்பதை முறையாகக் கண்காணிக்க வேண்டும். இவ்வாறு மற்ற ஜமாஅத்துகளும் செயல்பட்டுக் கொண்டிருக்கலாம். ஆனால் எனக்கு கிடைத்த அறிக்கையின்படி அமெரிக்கா ஜமாஅத்தின் அமீர் சாஹிப் அவர்கள் மட்டும் தான் இவ்வாறு முறையாக குறிப்பெடுகின்றார்கள். பிறகு சுற்றறிக்கைகளை அனுப்புகின்றார்கள். ஏதாவது வழிகாட்டல் கூறப்பட்டிருந்தால் உடனடியாக ஜமாஅத்துகளுக்கு அதைப் பற்றி தெரிவிக்கின்றார்கள். மற்றவர்களும் இதற்கேற்ப செயல்பட வேண்டும்.

U.K. ஒரு சிறு நாடாகும். இங்கு சரியான முறையில் இது தொடர்பான பணிகளைச் செய்தால் பிறகு எல்லா ஜமாஅத்துகளை விடவும் சிறந்த விளைவுகள் இங்கு ஏற்பட முடியும். இதை தவிர தலைமையகத்தில் இருந்து அல்லது என்னிடமிருந்து வழங்கப்படும் பல்வேறு வழிகாட்டல் களையும் உடனடியாக ஜமாஅத்துகளுக்கு எட்ட வைப்பதும் உங்களது பணியாகும். பிறகு அதை Follow-up செய்ய வேண்டும். Feed back ம் பெற வேண்டும்.

இவ்வாறே தேசிய அமீர்கள் மண்டல அமீர்களை நியமித்து அவர்கள் பணிகளைச் செய்வார்கள் என்று இருந்து விடக் கூடாது. எல்லா பணிகளும் அவர்களைச் சார்ந்ததாகவே இருந்து விடக் கூடாது. இவ்வாறு இருக்கக் கூடாது. இது சரியான வழிமுறை அல்ல. இதன் விளைவாக இதுவரை நான் பார்த்த அளவில் ஜமாஅத்தின் தேசிய தலைமையகத்திற்கும் ஜமாஅத்துகளுக்கும் இடையில் இடைவெளி ஏற்படுகின்றது. இதனால் நாம் தேசிய தலைமையகத்துடன் நேரடியாக தொடர்பு கொள்ள முடியாது என்ற உணர்வு உருவாகி இருக்கின்றது. இந்த உணர்வையும் அழித்துவிட வேண்டியது அவசியமானதாகும். எனவே இங்கும் மற்ற இடங்களிலும் ஜமாஅத்தின் அமீர் வருடத்தில் குறைந்தபட்சம் இரண்டு முறையாவது ஜமாஅத் தலைவர்களுடனான கூட்டத்தை நடத்த வேண்டும். பணிகள் மற்றும் முன்னேற்றத்தின் வேகம் பற்றி அதில் ஆய்வு செய்ய வேண்டும். எந்த தலைவர்கள் அவர்களுக்கு கவனமூட்டப்பட்ட பிறகும் கூட பணிகளைச் செய்யாமல் இருக்கின்றனரோ அவர்களைப் பற்றிய அறிக்கையை எனக்கு அனுப்ப வேண்டும். இவ்வாறே பொருளாளர்களும், தர்பிய்யத் செயலர்களும், தப்லீக் செயலர்களும் ஆகியோருடன் வருடத்தில் இரண்டு முறை நடத்த முடியவில்லை என்றாலும் ஒருமுறையாவது கூட்டம் நடைபெற வேண்டும். பணிகளை ஆய்வு செய்ய வேண்டும். இந்த செயலர்கள் துடிப்புடன் செயல்படுபவர்களாக ஆகி விட்டால் மற்ற செயலர்களும் பணிகளைச் செய்வார்கள் அல்லது மற்ற துறைகளில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகளும் தாமாகவே தீர்வுக்கு வந்து விடும்.

எனவே இன்றிலிருந்து தேசிய அமீர் தனது நிகழ்ச்சியை தயார் செய்ய வேண்டும். ஒவ்வொரு ஜமாஅத்திற்கும் அவர் சென்று எப்படி ஜமாஅத் அமைப்பை துடிப்புடன் செயல்பட வைப்பார் என்பதைப் பற்றி அவர் முடிவு செய்ய வேண்டும். U.K. மற்றும் சிறிய நாடுகளில் இது கடினமான பணியல்ல. தலைமையகத்தில் அல்லது ஏதாவதொரு மண்டலத்தின் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக இவர்களை ஒன்றுசேர்க்கலாம்.

ஆனால் அமெரிக்கா, கனடா போன்ற பெரிய நாடுகளில் அவர்கள் இதற்கான செயல்திட்டத்தை உருவாக்க வேண்டும். ஒவ்வொரு மட்டத்திலுள்ள ஜமாஅத்துகளையும் துடிப்புடன் செயல்பட வைப்பதற்கு அந்த ஜமாஅத்துகளுடன் தனிப்பட்ட முறையில் எவ்வாறு தொடர்பு கொள்ள முடியும் என்பதற்கான செயல்திட்டம் இருக்க வேண்டும்.

இன்னொரு அம்சமும் இருக்கின்றது. இதற்கு முன்பும் இதைப் பற்றி பலமுறை கூறியுள்ளேன். அதாவது ஜமாஅத்திலுள்ள நபர்களிடம் அன்புடனும் மென்மையுடனும் நடந்து கொள்ள வேண்டும். U.K. வின் மஜ்லிஸே சூராவில் நான் கூறிய விசயங்களை, எனது சுருக்கமான சொற்பொழிவை ஒவ்வொரு பொறுப்பாளருக்கும் எட்ட வைக்க வேண்டும். தப்ஷீர் துறை (வெளியீட்டுத் துறை) இதற்கான ஏற்பாட்டைச் செய்து ஒவ்வொரு இடத்திலும் இதை எட்ட வைக்க வேண்டும். நிர்வாக விசயங்களில் நான் கூற விரும்பும் இன்னொரு விசயம் பொறுப்பாளர்கள் தங்களது துறை தொடர்பான சட்ட திட்டங்களைக் கண்டிப்பாக படிக்க வேண்டும். சட்ட திட்டங்களைப் படித்து ஒவ்வொரு துறைக்கும் அதற்கான பொறுப்புகள் என்ன என்பதைப் பற்றி தெரிந்திருக்க வேண்டும்.

ஒவ்வொரு துறைக்கும் என்ன அதிகாரங்கள் உள்ளன என்பதைப் பற்றி அவர்களுக்கு தெரிய வேண்டும். தேசிய அமீருக்கு ஒரு வழிகாட்டல் இவ்வாறு இருக்கின்றது. அதாவது அவர் மண்டல அமீரிடம் எந்தப் பணியை ஒப்படைக்கின்றாரோ, என்ன வழிகாட்டலை வழங்குகின்றாரோ அதைப் பற்றி தலைமையகத்திற்கும் எழுத வேண்டும். அதைப் பற்றி தெரிவிக்க வேண்டும். இதற்கேற்ப எங்குமே எவரும் செயல்படவில்லை என்று நான் கருதுகின்றேன். ஏனென்றால் எனக்கு நாங்கள் இந்த மண்டல அமீரை நியமித்துள்ளோம். அவருக்கு இன்னின்ன அதிகாரங்கள் உள்ளன என்று குறிப்பிட்டு எந்தக் கடிதமும் இதுவரை வந்ததில்லை. சட்டதிட்ட எண். 177-ல் தெளிவாக இவ்வாறு எழுதப்பட்டிருக்கின்றது. இப்போது இதன் தேவை இருக்கின்றது. இது தொடர்பாக கவனமூட்ட வேண்டிய தேவையும் இருக்கின்றது. அமீர்மார்கள் குறிப்பாக சட்டதிட்டங்கள் அடங்கியுள்ள நூலில் சட்டதிட்ட எண். 215 லிருந்து 220 வரை கூறப்பட்டுள்ள விசயங்களை கண்டிப்பாக படிக்க வேண்டும். அவற்றை மனதில் பதிய வைத்துக் கொள்ளுங்கள். அதற்கேற்ப செயல்படுங்கள். குறிப்பாக ஏதாவதொரு விசயம் தொடர்பாக தீர்ப்பு வழங்கும் போது இவ்விசயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

இவ்வாறே குறிப்பாக நான் முபல்லிக் மார்களுக்கும் கவனமூட்ட விரும்புகின்றேன். அவர்களும் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும். ஜமாஅத்துகளில் திருக்குர்ஆன் கற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாட்டைச்

செய்வதும் அவர்களின் பொறுப்புகளில் ஒன்றாக இருக்கின்றது. அவர்கள் சுற்றுப் பயணத்தில் இருந்தால் குழந்தைகளுக்கும் திருக்குர்ஆன் பார்த்து ஓதத் தெரியாதவர்களுக்கும் திருக்குர்ஆனைக் கற்றுத் தருகின்ற ஆசிரியர்களை அவர்கள் தயார் செய்ய வேண்டும். இந்த வகுப்புகள் தொடர்ந்து நடைபெற வேண்டும். வாரத்தில் ஒருநாள் அல்லது இரண்டு நாள் மட்டும் இந்த வகுப்புகள் நடக்கக் கூடாது. மக்ரிப் நேரத்தில் அல்லது இசா நேரத்தில் அல்லது எந்த நேரத்திலும் அவர்கள் திருக்குர்ஆனைக் கற்றுக் கொடுக்க வேண்டம். சுற்றுப் பயணத்தில் இல்லாமல் அவர்கள் தமது இடங்களில் இருக்கும் போது எங்கெங்கு அவர்களது சென்டர்கள் இருக்கின்றதோ அங்கு அவர்களே அந்த வகுப்புகளை நடத்த வேண்டும். எங்களது குழந்தைகளுக்கு திருக்குர்ஆனைக் கற்றுத் தருபவர்கள் யாருமில்லை. வேறு வழியில்லாமல் எங்களுக்கு சில நேரங்களில் அஹ்மதி அல்லாதவர்களிடம் செல்ல வேண்டியது வருகின்றது என்று பல புகார்கள் வருகின்றன. இவ்வாறு எவர்களுக்கு காயிதா யஸ்ஸர்னல் குர்ஆன் கற்றுத் தர வேண்டுமோ அவர்களுக்கு அதை கற்றுத் தர வேண்டும். இவ்வாறு குழந்தைகளை நீங்கள் பள்ளிவாசலுடன் இணைத்து வைப்பீர்கள். தலைமையகத்துடன் இணைத்து வைப்பீர்கள். தர்பிய்யத் ரீதியாகவும் இவ்விசயம் பலன் அளிக்கக்கூடியதாக இருக்கும். மேலும் திருக்குர்ஆனைக் கற்றுக் கொடுப்பதால் கிடைக்கும் பலனும் கண்டிப்பாக கிடைக்கும். அது வெளிப்படையாகவே தெரியும்.

முபல்லிக்குகள் இந்த விசயத்தையும் நினைவில் வைப்பது அவசியமானதாகும். அதாவது பொதுவாக மூன்று அல்லது நான்கு வருடங்கள் ஓரிடத்தில் இருந்த பிறகு அவர்களுக்கு இடமாற்றம் செய்யப்படுகின்றது. இதற்கு முன்பாக கூட தேவைப்பட்டால் அவர்களுக்கு இடமாற்றம் செய்யப்படுகிறது. இதனால் மிகுந்த மனச்சோர்வு ஏற்படுவதாக சில நாடுகளிலிருந்து புகார்கள் வருகின்றன. அப்படிப்பட்ட இடமாற்றத்தை அவர்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் அருளால் இங்கு U.K. விலுள்ள முபல்லிக்குகளிடம் இப்படிப்பட்ட விசயங்கள் இருப்பதாக இதுவரை எந்த விசயமும் எனது பார்வைக்கு வரவில்லை.

இந்த விசயத்தையும் நினைவில் கொள்ளுங்கள். ஏதாவது ஒரு பொறுப்பாளர் அல்லது அமீருக்கும் கூட ஏதாவது ஒரு விசயம் தொடர்பாக நீங்கள் கவனமூட்ட வேண்டிய தேவை இருந்தால் உங்களுக்கிடையில் விவாதமோ அல்லது பிடிவாதமான போக்கோ ஆரம்பமாகி விடக்கூடாது. ஏனென்றால் இது ஜமாஅத் அமைப்பில் பிரிவினையை ஏற்படுத்துவதற்கு காரணமாகி விடும். நான் ஒருமுறை முபல்லிக்மார்கள் மார்க்க விவகாரங்களில் அமீர்களுக்கு கவனமூட்டலாம் என்று கூறியிருந்தேன். அவ்வாறு கவனமூட்டும்போது ஜமாஅத் அமைப்பு பாதிக்கப்படும் அளவிலுள்ள எந்தவொரு சூழலையும் உருவாக்காமல் மிகச் சிறந்த முறையில் போதனை செய்ய வேண்டும். அல்லாஹ் நம் அனைவருக்கும் உண்மையான அஹ்மதியாக ஆவதற்கும் நமது பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கும் தவ்ஃபீக் வழங்குவானாக!

இப்போது ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு நான் ஒரு ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். இது கனடா ஜமாஅத்தின் வெளி விவகாரச் செயலராக இருந்த ஆஸிப் கான் சாஹிப் அவர்களது மனைவி கானியா கான் சாஹிபா உடையதாகும். 2013 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 6ம் தேதி தமது 38வது வயதில் இவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

1998 ஆம் ஆண்டு இவர் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார். மிகவும் துடிப்புடன் செயல்படக்கூடிய தாயி இலல்லாஹ்வாக இவர் இருந்தார். தப்லீகில் இவருக்கு மிகுதியான ஆர்வம் இருந்தது. கனடாவில் லஜ்னா இமாயில்லாஹ்வின் தேசிய தப்லீக் செயலராக இவர் இருந்து வந்தார். உள்ளூர் அளவிலும் தேசிய அளவிலும் ஜமாஅத்திற்காக தொண்டாற்றக் கூடிய நல்வாய்ப்பு இவருக்கு கிடைத்தது. கனடா M.T.A –வின் நிரந்தர உறுப்பினராக இவர் இருந்து வந்தார். மீடியாவில் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்காக எப்போதும் இவர் ஆர்வத்துடன் காணப்பட்டார். இந்த நோக்கத்திற்காக அவர்கள் கனடாவில் நீண்ட பயணங்களை மேற்கொண்டது மட்டுமல்லாமல் அமெரிக்காவிற்கும் பயணம் செய்துள்ளார். தனது கொள்கையை ஒவ்வொரு Forum லும் மிகவும் அழகாகவும் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தும் வகையிலும் அவர்கள் கூறி வந்தார்கள்.

தொழில்ரீதியாக இவர் ஒரு ஆசிரியையாகப் பணியாற்றி வந்தார். இப்போது சில நாட்களுக்கு முன்பு தான் அவர் Vice Principal ஆக நியமிக்கப்பட்டிருந்தார். மாணவர்களிடம் மனித நேயத்தை உருவாக்குவதற்காக அவர்கள் எப்போதும் முயற்சி செய்து வந்தார்கள். ஆசிரியை என்ற நிலையில் இவர் பல அவார்டுகளைப் பெற்றுள்ளார். கிலாஃபத்துடன் இவருக்கு மிகுந்த நேசமும் ஆழ்ந்த பற்றும் தொடர்பும் இருந்தது. ஒவ்வொரு திட்டத்திலும் லப்பைக் என்று கூறி பங்கு பெறுபவராக இவர்கள் இருந்தார்கள். பர்தாவை பேணக்கூடியவராகவும் பொதுத் தொண்டு செய்யும் உணர்வுகளால் நிரம்பியவராகவும் இவர் இருந்தார். தனது உடல் உறுப்புகளையும் தனது வஃபாத்திற்குப் பிறகு இவர் தானமாக வழங்கியிருந்தார். அவ்வாறு தானம் செய்வதாக அவர் வஸிய்யத் செய்திருந்தார். ஏழைகளுடன் மிகுந்த

அனுதாப உணர்வுடன் நடந்து கொள்பவராகவும் ஈடிணையற்ற சிறந்த மனைவியாகவும், தாயாகவும் இவர்கள் திகழ்ந்தார்கள். இவரது திருமணம் பாகிஸ்தானைச் சேர்ந்தவருடன் நடந்தது. ஆனால் இவர் தன்னை Adjust செய்து கொண்டார். இஸ்லாமிய நெறிமுறைகளைப் பாதுகாக்கக் கூடியவராகவும் மிகுந்த தூய உள்ளம் கொண்ட பெண்மணியாகவும் இவர்கள் திகழ்ந்தார்கள். இவர்கள் அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்திருந்தவர் ஆவார்.

இவர்களது மூன்று பெண் குழந்தைகளும் வக்ஃபே நவ் திட்டத்தின் கீழ் தங்களது வாழ்வை ஜமாஅத்திற்காக அர்ப்பணித்துள்ளனர். இவர்களது தொடர்புகள் மிகவும் விரிவானதாக இருந்தது. இவரது ஜனாஸாவில் அந்த மாநிலத்தின் முதலமைச்சர் அவர்களும், பாராளுமன்ற உறுப்பினரும் வந்திருந்தனர். கவுன்ஸில் உறுப்பினர்கள், பள்ளியின் ஆசிரியர்கள், மாணவர்கள் என்று பெரும் எண்ணிக்கையில் மக்கள் இவரது ஜனாஸாவில் கலந்து கொண்டனர். எல்லாருக்கும் பிரியமானவராக இவர் இருந்தார். சிறியவர், பெரியவர் அனைவருமே இவரைப் பற்றி புகழ்ந்து கூறுவதை நான் கேட்டுள்ளேன். அல்லாஹ் இவருக்கு மன்னிப்பை வழங்குவானாக! இவரது தகுதியை உயர்த்துவானாக! இவரது பெண் பிள்ளைகளுக்கும் கணவருக்கும் பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HAZRATH KHALIFATUL MASIH V**

at **BAIT-UL-FUTUH MOSQUE,** London

on **16.08.2013**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD Sb.

Typeset by : A. MUHAMMAD NISAR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA

ASHURA EAST STREET, MELAPALAYAM,

TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456